பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 31 | வியாழக்கிழமை | 13.06.2024 | அதிர்வு 317

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள்

# அநுரவை நம்பி ஏமாறக்கூடாது!

சஜித் அணி எச்சரிக்கை



“வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், ஜே.வி.பியினரின் பொய் வாக்குறுதிகளை நம்பி எதிர்வரும் 06

# கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சாவு!



(எம். ஏப். றிபாஸ், அஸ்ஹர் இப்றாஹிம்)

தனியார் பஸ் ஒன்றும் ஹயஸ் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் உயிரிழந்தனர்.

பிபில – மஹியங்கனை பிரதான வீதியின் வேகம பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.

இதன்போது ஹயஸ் வாகனத்தில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே உயிரிழந்தனர்.

அத்துடன் இந்த விபத்தில் சிக்கி 9 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(மேலதீக படங்கள் 12 பக்கத்தில்....)

# ஒற்றையாட்சிக்கு முடிவு கட்டுவதே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## யாழில் சஜித்திடம் விக்கி சுட்டிக்காட்டு



– எஸ்.நிதர்ஷன் –

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவேன் எனக் கூறும் நீங்கள் அதில் எவ்வாறான அதிகாரங்களைத் தரப் போகின்றீர்கள் என்று சஜித் பிரேமதாஸவிடம் கேட்டுள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், காணி, பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக முழுமையான அறிக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.** 06

# தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டி வந்தது?

## சஜித்திடம் சுரேஷ் விளக்கம்



(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்ததால் சிங்கள ஜனாதிபதிகளில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. இதனால் தமிழ்ப் பொது வேட்பளர் ஒருவரை நிறுத்தத் தீர்மானித்துள்ளோம்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் 06




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்காக புதுடில்லி சென்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு பிரதமர் மோடியையும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரையும் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் இலங்கை ஜனாதிபதியின் தரப்பு மூலம் ஊடகங்களுக்கு ஒரு செய்தி கசிய விடப்பட்டது.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரும் செப்டம்பரில் கொழும்பு 06



# அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தனிப்பட்டதன்றி நாட்டின் வெற்றி, தோல்வியையே தீர்மானிக்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனது தனிப்பட்ட வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படாது. மாறாக நாட்டின் வெற்றி, தோல்வியே தீர்மானிக்கப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொருளாதார மறுசீரமைப்புக்கான நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் –

"இன்று துறைசார் மேற்பார்வை குழு அங்கத்தவர்களாகவே இங்கு வந்துள்ளீர்கள். அவ்வாறு செய்வதற்கான ஆலோசனையை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவே வழங்கியிருந்தார். இதனால் இளைஞர், யுவதிகள் நாட்டின் முன்னேற்றுத்துக்கான தங்களது யோசனைகளை வழங்க முடியும். அந்த யோசனைகளை நாமும் செவிமடுப்போம்.

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையை பற்றி பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுகொள்ளப் போவதில்லை. இந்த நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது என்பதே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத பிரச்சினைகளாகும்.

நாட்டில் சரியான பொருளாதார முறைமை இன்மையே அதற்கு காரணமாகும். நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துக் பொருட்களையும் இறக்குமதி செய்தோம். அதற்கு செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. அதற்கு மத்தியில் யுத்தத்துக்கும் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் யுத்தத்திற்கு பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்கு கிடைத்திருந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆன பின்பும் நாம் அந்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. நாம் பழைய முறைகளையே பின்பற்றினோம். பணம் இல்லாத வேளையில் கடன் பெற்றுக் கொண்டோம். அதனை மீளச் செலுத்த முடியாமல் போனது.

இவ்வாறான நேரத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை சொல்ல எவரும் முன்வரவில்லை. இருப்பினும் நாட்டில் பொருளாதார மாற்றம் ஒன்று அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். அதற்கான பணிகளை செய்யும் போது நாட்டை விற்கப் போவதாக பிரசாரம் செய்யப்பட்டது. இறுதியில் நாம் வங்குரோத்து நிலையை அடைந்தோம்.

நாட்டின் வருமான தேவையைக் கருத்தில் கொண்டு 2015 ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவி வகித்த காலத்தில் வரி அதிகரிப்புச் செய்ய வேண்டியிருந்தது.

03













# அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தனிப்பட்டதன்றி நாட்டின் வெற்றி தோல்வியையே தீர்மானிக்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி....)

2019 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரிகளை குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

அந்த நேரத்தில் கொவிட் தொற்றும் பரவியது. நாட்டுக்கு 03 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பு தேவைப் பட்டது. இருப்பினும் நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் ஒரு வரும் அது பற்றி பேசவில்லை. ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை பிரகடனத்தில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந் தோம். வேறு எவரும் அதுபற்றி பேசவில்லை. அதற்கு மாறாக செய்ய முடியாது என்று அறிந்தும் பல பொய்யான வாக்குறு திகளை வழங்கினர். அதன் பலனாக ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரேயொரு நாடாளுமன்ற ஆசனம் மட்டுமே கிடைத்து.

உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஒரு ஆசனத்தை வென்று நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்கள் பிரதமர் அல்லது ஜனாதிபதியாக பதவியேற்றதில்லை. ஆனால் இலங்கையில் அது நடந்தது. நாட்டின் அரசியல் வங்கு ரோத்து நிலையே அதற்கு காரணமாகும். நாட்டை பொறுப் பேற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க எவரும் முன் வரவில்லை. அதனால் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்டேன்.

அதன் பின்னர் நாட்டின் இளைஞர், யுவதிகளிடமும் இந்த பொறுப்புக்களை வழங்கி அவர்களுக்கு இதுகுறித்த தெளிவூட்டல்களை வழங்க நாம் தீர்மானித்தோம். அதன்படியே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாட்டின் முன்னேற்றத்துக்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. அதனைப் பொறுப்பேற்று நாட்டை முன்னேற்றிச் செல்வ தற்காக இளைஞர்கள் தயாராக வேண்டும்.

இன்று அரசியல் வாதிகள் பலதரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அவர்களில் எவரும் நாட்டின் முன்னேற்றுத் துக்கான கொள்கைகளை முன்மொழியவில்லை. எதிர்க் கட்சித் தலைவரும் அநுர குமார திசாநாயக்கவும் எந்த இடத்தில் விவாதம் செய்வது என்பது குறித்தே ஒரு மாத காலமாக விவாதித்தனர். இறுதியாக ஒரு விவாதத்திற்கு வரவும் இல்லை. இவர்களில் ஒருவரிடத்திலும் நாட்டின் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் இல்லை.

அதனால், அரசாங்கம் கொண்டுச் செல்லும் வேலைத் திட்டத்திற்கு மாறான வேறு முறைமைகள் இருக்குமாயின் அதனை அவர்கள் கூற வேண்டும். எவரும் அவ்வாறான திட்டத்தை முன்வைத்திருப்பதாக தெரியவில்லை. உங்கள் எதிர்காலத்தை பொறுப்பேற்க அவர்கள் தயாராக இல்லாத பட்சத்தில் உங்களின் எதிர்கால முன்னேற்றத்தை நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதற்கான வேலைத் திட்டம் மிக அவசியமானது. உங்கள் அறிவு மேம்பாட்டிற் காக ஏனைய அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதி நிதிகளை சந்திக்கவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். புதிய திட்டங்களை முன்னோக்கி கொண்டுச் செல்ல வேண்டும். பழைய முறைமைகளில் சிக்கிக் கிடப்பதை விடுத்து துரித அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.” – என்றார்.













# தத்தளித்த 2 அனலைதீவு மீனவரையும் காப்பாற்றிய ஆட்காட்டுதுறை மீனவர்களுக்கு நன்றி தெரிவிப்பு!

## மனித நேயத்துடன் படகுகளுடன் அவர்களை விடுவிக்கக் கோரிக்கை




(எஸ்.நிதர்ஷன்)

சீரற்ற காலநிலை காரணமாக நடுக் கடலில் தத்தளித்து தமிழகத்தில் கரையொதுங்கிய யாழ்ப்பாண மீனவர்களை பத்திரமாக மீட்டுள்ள இந்திய மீனவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துள்ள வடக்கு மீனவர்கள், நல்லெண்ண அடிப்படையில் மனித நேயத்துடன் அவர்களை விடுவிக்க இந்தியப் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் அ.அன்னராசா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் தீவகத்தின் அனலைதீவு கடற்பரப்பிலிருந்து படகு ஒன்றில் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமல் போயிருந்த நிலையில் மீனவர்களும் கடற்படையினரும் தொடர்ந்தும் தேடுதல் நடத்தி வந்தனர்.

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் மீனவர்கள் ஒன்றிணைந்து தொடர்ச்சியான தேடுதல் நடவடிக்கைளை முன்னெடுத்து வந்த நிலையில் இந்தியாவின் நாகபட்டினம் கடற்பகுதியில் இந்த இரு மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடற் பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இந்த இரு மீனவர்களையும் தமிழ்நாட்டின் நாகபட்டினம் மாவட்டத்தின் ஆட்காட்டுதுறை மீனவர்கள் பத்திரமாக மீட்டுக் கொண்டு சென்றிருக்கின்றனர்.

நடுக் கடலில் தத்தளித்த ஊர்காவற்துறை, அனலை தீவைச் சேர்ந்த இரண்டு மீனவர்களையும் மீட்டுக் கரைக்கு கொண்டு சென்று காப்பாற்றிய தமிழ்நாட்டின் நாகபட்டினம் மாவட்ட ஆட்காட்டுதுறை மீனவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்து பாராட்டிக் கொள்கிறோம்.

ஏனென்றால் இந்த இரு மீனவர்களதும் குடும்பங்களும் அப்பிரதேச மக்களும் கண்ணீரில் நனைந்து கொண்டிருந்த வேளையிலே இந்திய மீனவர்களுடைய மனிதநேயப் பணிக்கு மீனவர்கள் அமைப்புக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறி கொள்கிறோம்.

மேலும் இவர்கள் உண்மையான கடற்தொழிலாளர்கள். அன்றாடம் உழைத்து வாழும் கடற்தொழிலாளர்கள். குடும்பங்களும் மிகப் பெரிய கஷ்டத்தோடு இருக்கிறார்கள். ஆகவே அவர்களின் படகு இயந்திரத்தோடு அவர்களை இங்கு அனுப்பி வைக்க வேண்டும் எனஜ் கோருகிறோம்.

இந்த இரண்டு மீனவர்களையும் நல்லெண்ணத்துடனும் மனித நோயத்தோடும் பாரதப் பிரதமர், தமிழக முதல்வர், இந்திய தூதரகம் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

இந்த இரு மீனவர்களுடன் அங்கு கரையொதுங்கிய அவர்களின் படகையும் வெளி இணைப்பு இயந்திரத்தோடு யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அவர்களின் குடும்பம் சார்பாகவும் வடக்கு கடற்தொழிலாளர்கள் சார்பாகவும் பணிவான வேண்டுகோளை முன்வைக்கிறோம். – என்றார்.



# சார்க் பொதுச் செயலாளர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சார்க் அமைப்பின் பொதுச் செயலாளர் கோலம் சர்வார்க்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சார்க் நாடுகளுக்கிடையிலான பல்வேறு திட்டங்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பில் பாரபட்சமின்றி தலையீடு செய்யுமாறு சார்க் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் செயற்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கு சார்க் நாடுகளின் ஆதரவை பெறுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை சார்க் கலாச்சார மையத்தை மொடர்ன் ஆர்டிற்காக மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் இணைந்து கொண்டனர்.

# 15 சட்ட மூலங்கள் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளனவாம்!

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தகவல்



"எதிர்வரும் சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்ட மூலங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு நாட்டுக்குத் தேவையான அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடிந்துள்ளது."

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நமது நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பில், நீதியை நிலைநாட்டுதல் தொடர்பான மிகப்பாரிய சட்ட மறுசீரமைப்புகள் இடம்பெற்ற காலமாக இக்காலகட்டத்தைக் குறிப்பிடலாம். கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இது நாட்டில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும், அரச துறையிலும், தனியார் துறையிலும் இலஞ்சம், மோசடி, ஊழல், கொமிஷன் பெறல் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் ஊழல் தடுப்புச் சட்டம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு சாசனத்துடன் பொருந்தும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு பல அதிகாரங்களும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பாக புதிய குற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், பெயரளவில் இருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான சட்டம் தற்போது நிலையான நிலையை எட்டியுள்ளது. எனவே, நாட்டின் அனைத்து பிரஜைகளும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் சொத்து பொறுப்பு அறிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கிறார்கள். மேலும், வழக்குப் பொருள்கள் மற்றும் போதைப்பொருள்களை அகற்றுவது தொடர்பாக புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும், குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் குறித்து விசாரிக்க அதிகார சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், முதன்மை வழக்கு நடவடிக்கை சட்டத்திற்குத் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திருமணம் தொடர்பான புதிய சட்டமூலமும் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பாக பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றங்களை மாத்திரம் முன்வைத்து அந்த சட்டமூலத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

மேலும், தற்போது காதி நீதிமன்றம் தொடர்பாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதன்படி, இரண்டு மாற்றங்களைச் செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. அதேபோன்று, வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை கையாளும் வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை செயல்படுத்துவதற்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் பல திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், அண்மையில் நிறைவேற்றப்பட்ட நீரியல் சட்டத்தை அடுத்த ஆண்டு அமுல்படுத்தலாம். இதன்மூலம் இந்நாட்டின் கடல் எல்லைகள் வழியாக பயணிக்கும் கப்பல்கள் மூலம் 50 மில்லியன் டொலர்களுக்கு மேல் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்." – என்றார்.

# இரண்டாவது மீளாய்வில் நாணய நிதியம் ஒப்புதல்




சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் இரண்டாவது மீளாய்வின் பின் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் – "இலங்கையின் வேலைத்திட்டத்தின் 2 ஆவது மீளாய்வுக்கு சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்துள்ளது. பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் வளமான எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் எங்களின் அர்ப்பணிப்புக்கு இந்தச் சாதனை ஒரு சான்றாகும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றார் என்றும், அவரின் வருகையை ஒட்டிய விடயங்களை இறுதி செய்வதற்காக வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அதற்கு முன்னர் ஓகஸ்டில் கொழும்புக்கு வருவார் என்றுமே செய்திகள் கசிய விடப்பட்டன.

ஆனால் இந்தியப் பிரதமரின் வருகை செப்டம்பர், ஒக்டோபரில் கடைசிவரை இடம்பெறாது என்று சில முக்கிய வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அது இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் உச்சக் காலம். அந்தச் சமயத்தில் வெளிநாட்டுத் தலைவரின் விஜயத்துக்கு இடமளிக்கும் விதத்தில் இலங்கையின் அரசியல் களநிலைமை இருக்காது என்று விடயம் அறிந்த அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

வேண்டுமென்றால் இந்தத் தேர்தலுக்கு முன்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பு வந்து போகலாம். அதுதான் நடக்கும் என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எனினும் புதிதாக தெரிவு செய்யப்படும் இலங்கை ஜனாதிபதி தமது பதவியேற்பு நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரை அழைத்தால் அதற்காக அவர் கொழும்பு வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

\+ + +

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், முன்னர் அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் சகாவான சஜித் பிரேமதாஸவும் இந்த ஜனாதிபதி தேர்தலில் எதிரும் புதிருமாகக் களம் இறங்குவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

இந்தச் சமயத்தில் தேர்தலையொட்டிய சின்னத்தில் ரணில் தரப்பு குசும்பு பண்ணலாம் என்று ஒரு தகவல் தெரிவிக்கிறது.

சஜித் தமது ஐக்கிய மக்கள் சக்தியின் பெயரில் – தொலைபேசி சின்னத்தில் – களமிறங்குவார் என்பது நிச்சயமான ஒன்று. அது பழைய தொலைபேசி. கையால் ஒவ்வொரு இலக்கமாகச் சுழற்றி சுழற்றி டயல் செய்யும் முறைமை கொண்டது.

ரணில் விக்கிரமசிங்க தமது ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் களமிறங்க மாட்டார் என்பதும் உறுதியாகிவிட்டது. பொது வேட்பாளராகக் களமிறங்க விரும்பும் ரணில் அதற்காகப் பொது சின்னம் ஒன்றையும் தேடுகின்றார்.

ரணிலுக்கு முழு ஆதரவளிக்கும் அமைச்சர் டிரான் அலஸின் கட்டுப்பாட்டில் ஐக்கிய மக்கள் கட்சி (யு.பி.பி) உள்ளது. அதன் சின்னம் கைத்தொலைபேசி. அந்த சின்னத்தில் போட்டியிட முன்வருமாறு அமைச்சர் டிரான் அலஸ் ரணிலை நச்சரித்துக் கொண்டிருக்கின்றார்.

அண்மையில் ஐ.தே.கவின் தலைமையகத்தில் நடைபெற்ற மாநாடொன்றில் “சுற்றும் காலம் முடிந்துவிட்டது. இனி அமுக்கும் காலம்“ என ரணில் விக்கிரமசிங்க இரு பொருள் படக் கூறியிருந்தார். இது அவரது சின்னத்தை மறைமுகமாக வெளிப்படுத்தக் கூறிய கருத்தாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தொலைபேசி சின்னத்திலேயே போட்டியிட்டால் ஐ.தே.க. பழைய வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என ரணிலுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது என்று செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

பழைய தொலைபேசிக்கும் புதிய கைத்தொலைபேசிக்கும் நேரடி மோதல் என்றால் களம் வலு சூடாக தான் இருக்கும்.

சுழற்றுவதையா, தடவுவதையா தெரிவு செய்வது என்று மக்கள் முடிவு செய்ய வேண்டிநேரும்...!

## அநுரவை நம்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிக்கும் தீர்மானத்தை எடுக்கவே கூடாது.” – என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

“வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்த ஜே.வி.பியினர் தமிழர்களுக்கு எப்படி புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வை வழங்குவார்கள்? எப்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவார்கள்?” – என்றும் ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

ஜே.வி.பியினர் ஒருபோதும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டார்கள் என்றும், அவர்கள் புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வை வழங்க முன்வரமாட்டார்கள் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய இனப் பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும், அதுவரையில் தற்போதுள்ள மாகாண சபை முறைமையை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தோடு முன்னெடுக்க வேண்டும் என்றும், இதுவே தங்களின் நிலைப்பாடு என்றும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அந்த அமைப்பின் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்தில் தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவிடம் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஆயுத வன்முறையாளர்களான ஜே.வி.பியினரை நம்பி வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவே தமிழர்களுக்குத் தீர்வை வழங்கக்கூடிய ஒரே தலைவர். எனவே, அவருக்கே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்.” – என்றார்.

## தமிழ்ப் பொது வேட்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியினரை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய மக்கள் சக்திக்கும் எமது கட்சியினருக்கும் இடையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான ஒரு பேச்சு நடைபெற்றிருக்கின்றது.

இதன்போது கடந்த காலங்களில் தமிழ் மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டிருக்கின்றோம் என்பதை விலாவாரியாக அவருக்கு நாங்கள் விளங்கப்படுத்தியிருக்கின்றோம்.

நாங்கள் ஏன் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டிய ஏற்பட்டது என்பதையும், அது எவ்வாறு எங்கள் மேல் திணிக்கப்பட்டது என்பதையும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம்.

அது என்னவென்று சொன்னால், சிங்கள ஜனாதிபதிகள் மேல் எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களும், நாங்கள் ஏமாற்றப்பட்டதும் அது மாத்திரமல்லாமல் குறைந்தபட்சம் அரசியல் சாசனத்தில் உள்ளவற்றைக் கூட நிறைவேற்றாமல் போனதும் வெறுமனே தொடர்ந்தும் நல்லிணக்கம் நல்லிணக்கம் என்று பொய்களைப் பேசிக் கொண்டிருப்பதும்தான் காரணமாகும்.

இவ்வாறான விடயங்கள் தொடர்ந்தும் இங்கு நடந்து கொண்டிருக்கின்றன என்ற விடயங்களைத் தெளிவாக அவரிடம் சொல்லியுள்ளோம்.

ஆகவேதான் இப்போது நாங்கள் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நியமிக்கின்ற முடிவுக்கு வந்திருக்கின்றோம். இதற்குச் சிவில் சமூகங்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஆதரவை வழங்கித் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றன என்பதையும் அவரிடம் கூறியுள்ளோம்.” – என்றார்.

## ஒற்றையாட்சிக்கு முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, விக்னேஸ்வரன் எம்.பியை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். நல்லூருக்கு அருகாமையில் உள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் வந்துள்ள சஜித் பிரேமதாஸ என்னையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் பேசினோம்.

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகத் தான் நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் கூறினார்.

தமிழ் மக்களுக்குத் தான் எதனைச் செய்யப் போகின்றேன் என்பதை எனக்குக் கூறிவிட்டு செல்வதற்காகவே என் வீட்டுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், தான் எதனைத் தருவதாக வாக்குறுதி வழங்குகின்றேனோ அதனைத் தருவதற்குச் சகல முயற்சிகளையும் எடுத்து நிச்சயம் தருவேன் என்று அவர் கூறினார்.

ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு என்னவெனில் நாட்டில் இருக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பை முற்றாக மாற்றுவதுதான் என நான் கூறினேன்.

13 தருவேன், தருவேன் என்று மீண்டும் மீண்டும் கூறுகின்றீர்கள், எதனைத் தரப் போகின்றீர்கள்? எவ்வாறான அதிகாரங்களைத் தரப் போகின்றீர்கள்? என்று அவரிடம் நான் கேட்டேன்.

அத்தோடு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை என்னவாகக் கொடுப்பதாக நீங்கள் உத்தேசித்துள்ளீர்கள் என்பது சம்பந்தமாக முழுமையான ஓர் அறிக்கையை நீங்கள் வெளியிட்டீர்களானால் உங்களுடைய மனதிலே என்ன இருக்கின்றது என்பதைப் பற்றி நாங்கள் முழுமையாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் எனக் கூறினேன்.” – என்றார்.



# நினைவேந்தல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிப்பு

இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரம் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூர்வது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் ஜகத் வீரசிங்க, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி.சனாதனன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பர்ஸானா ஹனீபா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் துஷாரி சூரியாராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானராச்சி ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

22-05-2023 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

1983 - 2009 காலகட்டத்தில் இலங்கையில் நடந்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றினால் உயிரிழந்த பொதுமக்கள், ஆயுதப்படை உறுப்பினர்கள், பொலிஸார், முன்னாள் போராளிகள் உட்பட அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவிடமொன்றை அமைப்பது குறித்து இந்தக் குழு ஆய்வு செய்தது.

இதற்காக, நிபுணர் குழு கடந்த நாள்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் அமர்வுகளை நடத்தியதுடன், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிபுணர்களுடன் ஆலோசனைகளையும் நடத்தியது.

இந்த பொதுமக்கள் அமர்வுகள் அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தேசிய ஒருங்கிணைப்பு அதிகாரிகளினால் ஒருங்கிணைக்கப்பட்டன. பங்குபற்றிய மக்களுக்கு தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்திற்கான



தமது அபிலாஷைகள், யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியதோடு பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை வெவ்வேறு வழிகளில் முன்னெடுப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. வளமான அறிவுக் கட்டமைப்பையே இது வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, நாட்டின் மோதல்கள் தொடர்பான கடந்த காலத்தைப் பற்றி அறிக்கையிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ அல்லது வேறுவிதமாகக் கையாளும் முயற்சியின் போது இந்தப் பங்களிப்புகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த சந்திப்புகளின் போது முன்வைக்கப்பட்ட பரந்த அளவிலான யோசனைகளை பரிசீலித்த பின்னர் இந்தக் குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இலங்கையின் மோதல்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுடன் உருவான கலை மற்றும் கலாச்சார வெளிப்பாடுகளை பாதுகாத்து வைக்கும் குறியீட்டு ரீதியிலான கட்டடமொன்றை அமைக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக கூட்டு அர்ப்பணிப்பை உறுதி செய்வதும் அனைத்து இலங்கையர்களிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அநீதிக்கு அலங்காரச் சட்டை

'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்பர். பல விடயங்களுக்கும் இந்தப் பழமொழி பொருந்தும். நமது சட்ட - நீதித்துறைக்கும் கூட இது பொருந்துவதுதான்.

தற்போதைய ரணிலின் அரசு இந்த இரண்டு வருட கால ஆட்சியில் தனது சாதனைகளில் ஒன்றாக அதிக எண்ணிக்கையான சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியமையைச் சுட்டுகின்றது.

எதிர்வரும் சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, நாட்டுக்குத் தேவையான அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடிந்துள்ளதாகவும் அமைச்சர் பீற்றிக் கொள்கின்றார்.

"நமது நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பில், நீதியை நிலைநாட்டுதல் தொடர்பான மிகப்பாரிய சட்ட மறுசீரமைப்புகள் இடம் பெற்ற காலமாக இக்காலகட்டத்தைக் குறிப்பிடலாம். கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இது நாட்டில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்பதைக் குறிப்பிட வேண்டும்" - என்று அவர் தமது அரசுக்கு புகழாரம் சூட்டிக் கொள்கின்றார்.

ஒன்றரை வருட காலத்தில் 75 சட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறோம், அது பெரிய சாதனை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பீற்றிக் கொள்ளத் தவறுவதில்லை.

உயர்நீதிமன்ற பரிந்துரைகளுக்கு முரணாக - அரசமைப்புக்கு மாறாக - நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை கூட இந்தக் காலத்தில்தான். அந்த 75 இல் அதுவும் ஒன்று.

சட்ட முறையற்ற விதத்தில் - ஒழுங்கு விதிகளுக்கு மாறாக - அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணாக - சர்ச்சைக்குரிய இந்தச் சட்டம் நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது இந்த அரசின் காலத்தில்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்படும் என்றும், புறமொதுக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் அப்போது சீர் செய்யப்படும் என்றும் கூறிய அரசு, கடைசியில் அதனைச் செய்யாமல் ஒதுக்கி விட்டது.

முறையற்ற விதத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டம் முறையான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதாக காட்டப்படுவதுதான் இந்த அரசின் சாதனை.

சட்டங்களை நிறைவேற்றி, வெள்ளைத் தாளில் கருப்பு மையினால் அச்சிட்டு, நீதித்துறை அலுமாரிகளில் அவற்றை அடக்கி வைத்திருப்பதில் அர்த்தமில்லை. அது சாதனையும் இல்லை.

உருவாக்கப்பட்ட சட்டங்கள் நீதி முறையான ஒழுங்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல. நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' என்பது நீதித்துறை தத்துவங்களில் ஒன்று.

அது சட்ட உருவாக்க விடயத்துக்கும் பொருத்தமானதுதான். சட்டங்கள் உருவாக்கப்படுவது மாத்திரமன்றி அவை முழு அளவில்-நீதியானமுறையில்-நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்று காட்டப்படவும் வேண்டும். அப்போதுதான் உருவாக்கப்பட்ட அந்தச் சட்டங்கள் மீதும் அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நீதித்துறை மீதும் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

நாட்டின் மீயர் சட்டம் அரசமைப்புதான். அதுதான் சட்டங்களில் உயர்ந்தது.

அந்தச் சட்டத்தில் 13 ஆவது திருத்தமாகக் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டப் புத்தகத்தில் - மூல நூலில் - இடம் பெற்றுள்ள அந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 36 வருடங்களுக்கு மேல்பிடிவாதமாக மறுத்து வரும் இலங்கையின் பௌத்த - சிங்கள வெறிப்போக்கு ஆட்சிப் பீடங்கள், இங்கு சட்டங்களை நிறைவேற்றுவதைச் சாதனையாகக் காட்டுவது அபத்தமானது.

நாட்டின் உயர் சட்டமான அரசமைப்பில் இருப்பவற்றையே நடைமுறைப் படுத்த மறுக்கும் ஆட்சி பீடம், எத்தனை சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம் என்று எண்ணிக்கையைக் காட்டிப் பீற்றுவதில் என்ன அர்த்தம் - நியாயம் - இருக்க முடியும்?

யுத்தத்தின் இறுதியில் பல்லாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்து, யுத்தக் குற்றங்கள் புரிந்து, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்து, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தரப்புகளுக்கு எதிராக நீதி, நியாயமான நடவடிக்கை எடுப்பதற்கு வக்கற்ற இலங்கையின் நீதித் துறைக்கு எத்தனை சட்டங்களை அலங்காரச் சட்டைகளாக அணிவித்தாலும், அதன் அநீதிப்போக்கு முழு நிர்வாணமாக அப்பட்டமாகவே வெளித்தோற்றும்.

# தமிழர்கள் நன்றியுள்ளவர்கள் நடிகர் ரஜினிகாந்த் தெரிவிப்பு



"தமிழர்கள் புத்திசாலிகள், உழைப்பாளிகள், நன்றி உள்ளவர்கள், நாணயமாக இருப்பார்கள்" என நடிகர் ரஜினி காந்த் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அறக்கட்டளையின் பொன்விழாவில், காணொலி வாயிலாக கலந்து கொண்டு நடிகர் ரஜினிகாந்த் உரையாற்றுகையில்,

"இந்தியாவின் இதயம் என்றால் மும்பை என்று சொல்வார்கள். பொருளாதார தலைநகரம் என்றால் அது மும்பை. அங்கே அம்பானி, டாடா ஆகியோருடன் நெருங்கி பழகும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்துள்ளன.

அரசியல் தலைநகரம் என்றால் அது டெல்லி. டெல்லி என்று சொன்னால், பிரதமர் வாஜ்பாய் முதல் மோடி வரை அவர்கள் அருகே அமர்ந்து டிபன் சாப்பிட்டு பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது.

இந்த இரண்டு இடங்களிலும் டாடா ஆகட்டும், அம்பானியா கட்டும், அமைச்சர்கள் ஆகட்டும் இவர்களின் தனிப்பட்ட மேனேஜர்கள், ஆலோசகர்களில் 70-75 சதவீதம் பேர் தமிழ் மக்களாக தான் இருக்கிறார்கள்.

மும்பையிலும் சரி, டில்லியிலும் சரி. தமிழர்கள் புத்திசாலிகள், உழைப்பாளிகள், நன்றி உள்ளவர்கள், நாணயமாக இருப்பார்கள். அந்த குணம் தமிழரின் குணம். இது இருப்பதால் தான் எங்கு சென்றாலும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

2047 இல் இந்தியா வல்லரசு நாடாகும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. அடுத்த 10-15 ஆண்டுகளில் பொருளாதார ரீதியாக மேலும் இந்தியா முன்னேறும். உங்கள் கடமைகளை முடித்துவிட்டு இந்தியா வந்துவிடுங்கள். 50 ஆண்டுகளாக நான் சினிமாவில் நடித்து வருகிறேன். எல்லாம் உங்களின் ஆதரவு. மகிழ்ச்சியாக இருக்கிறேன்." என்றார்.

# இண்டியா கூட்டணியின் வெற்றி ஜனநாயகத்தின் பாதுகாப்பு கவசம்

## தி.மு.க. தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



"தமிழகத்தின் நாற்பதுக்கு நாற்பது உள்ளிட்ட இண்டியா கூட்டணியின் பரவலான வெற்றிதான், அதிகாரத்தில் இருப்பவர்களுக்கான கடிவாளம். இந்திய ஜனநாயகத்தின் பாதுகாப்புக் கவசம்,"

- இவ்வாறு தி.மு.க. தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தி.மு.க. தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில்,

"தேர்தல் முடிவுகள் வெளியான நாளில் அண்ணா அறிவாலயத்தில் ஊடகத்தினருடனான சந்திப்பின்போது அவர்கள் என்னிடம், "நாற்பதுக்கு நாற்பது என்ற முழுமையான வெற்றியை நாங்களே எதிர்பார்க்கவில்லை" என்றனர். "நான் எதிர்பார்த்திருந்தேன்" என்று அவர்களிடம் தெரிவித்தேன். உறுதியாக நான் எதிர்பார்த்ததற்குக் காரணம், தி.மு.கவின் தொண்டர்கள் நிச்சயம் இந்த முழுமையான வெற்றியைப் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையினால் தான். அதற்கேற்ற உழைப்பை வழங்கிய தொண்டர்கள் ஒவ்வொருவருக்குமான பாராட்டை உங்களில் ஒருவன் என்ற முறையில் நான் ஏற்றுக்கொள்ளும் விழாதான் கோவை முப்பெரும்விழா. இது தி.மு.க. தொண்டர்களின் உழைப்பைப் பாராட்டுகின்ற விழா.

தமிழகத்தில் நாம் பெற்றுள்ள வெற்றி, இண்டியா கூட்டணிக்கு மட்டுமின்றி, இந்திய ஜனநாயகத்துக்கும் நம்பிக்கையை அளித்திருப்பதால், கோவையில் நம் தோழமைக் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ள முப்பெரும் விழா என்பது மாபெரும் ஜனநாயகக் கொண்டாட்டமாக அமையவிருக்கிறது. மேற்கு மண்டலம் தங்களின் பட்டா நிலம் என்பது போல நினைத்துக்கொண்டு அங்குள்ள மக்களை வஞ்சித்து அரசியல் லாபம் தேடிய கட்சிகளின் உண்மையான நிலை என்ன என்பதைக் கழகத்துக்கும் அதன் கூட்டணிக்கும் அளித்துள்ள வெற்றியின் வாயிலாக மேற்கு மண்டல மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். அதனால் தான் கோவையில் முப்பெரும் விழா நடைபெறுகிறது.

கட்சி மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், வெற்றி விழாக்கள் எதுவாக இருந்தாலும் அது வெறும் கூடிக் கலைவதற்கான நிகழ்வல்ல. ஒவ்வொரு நிகழ்வும் தொண்டர்களுக்கான பயிற்சி அரங்கம். அடுத்த களத்துக்கான ஆயத்தப் பணி. கோவை முப்பெரும் விழாவைத் தொடர்ந்து விக்கிரவாண்டி தொகுதியின் இடைத்தேர்தலை எதிர்கொள்ளவிருக்கிறோம். அங்கும் நம் தொடர் வெற்றியினை உறுதி செய்தாக வேண்டும். அதனைத் தொடர்ந்து, ஊரக உள்ளாட்சித் தேர்தல் களம் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, 2026 சட்டமன்றத் தேர்தல் களத்துக்கும் நாம் இப்போதே ஆயத்தமாக வேண்டும்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் புதுச்சேரியை உள்ளடக்கிய 40 தொகுதிகளிலும் நாம் மகத்தான வெற்றி பெற்றிருப்பதுடன், தமிழகத்தின் 39 மக்களவைத் தொகுதிகளுக்குட்பட்ட 234 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.கவின் தலைமையிலான இண்டியா கூட்டணி 221 தொகுதிகளில் முன்னிலை பெற்றிருக்கிறது. இதுதான் தமிழக மக்கள் நமக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழ். மூன்றாண்டுகால திராவிட மாதிரி அரசின் திட்டங்கள் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் நேரடி பயன்களைத் தந்திருப்பதால் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நாம் இருக்கிறோம். அந்த நம்பிக்கை மேலும் வலுப்பெறும் வகையில் திராவிட மாதிரி அரசின் சாதனைத் திட்டங்கள் தொடரும்.

அவை சரியான முறையில் மக்களிடம் சென்று சேர்வதையும் அதன் நீண்டகாலப் பயன்களையும் எடுத்துரைக்கக்கூடியவர்களாக உடன்பிறப்புகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும். நாற்பதுக்கு நாற்பது என்று நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது போல, 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றியினை உறுதி செய்திட ஜூன் 15 கோவை முப்பெரும் விழா நமக்கு ஊக்கமளிக்கும் இடமாக அமையட்டும்," - என்று குறிப்பிட்டுள்ளார்.




# பிரிக்ஸ் கூட்டமைப்பில் 5 புதிய உறுப்பு நாடுகள்

பிரிக்ஸ் கூட்டமைப்பில் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 5 உறுப்பு நாடுகள் புதிதாக இணைந்துள்ளன.

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் குறித்த 5 நாடுகளும் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைந்துள்ளன.

சர்வதேச விவகாரங்களில் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக பிரேஸில், ரஷியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் 'பிரிக்' கூட்டமைப்பை கடந்த 2006 ஆம் ஆண்டு செப்டம்பரில் நிறுவின.

இதைத் தொடர்ந்து, 2010 செப்டம்பரில் தென்னாப்பிரிக்காவை உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு 'பிரிக்ஸ்' என மறுபெயரிடப்பட்டது. உலகப் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய இயந்திரமாக இருந்துவரும் பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய 5 நாடுகளுடன் 25 சதவீத உலகப் பொருளாதாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பன்னாட்டு கூட்டமைப்பாக பிரிக்ஸ் திகழ்ந்து வருகிறது.

இந்த நிலையில் , பிரிக்ஸ் விரிவாக்கத்தில் இணைந்த நாடுகளை இந்தியா வரவேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய உறுப்பினர்களின் வருகையால், புவியியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மேம்பட்ட உறுப்பினர் ஆதரவை கொண்ட பிரிக்ஸ், உலக அரசியல் மற்றும் பொருளாதார கூட்டாண்மை உறவுகளை மறுசீரமைக்கும் திறன் பெறுகிறது என இந்தியா மேலும் தெரிவித்துள்ளது.

# ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்ட இரண்டு இந்தியர்கள் உயிரிழந்தனர்





ரஷ்ய இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட இரு இந்தியர்கள் உக்ரைன் போரில் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வரும் நிலையில், தற்போது இரு இந்தியர்கள் உக்ரைனுடான போரில் உயிரிழந்துள்ள சம்பவம் இந்திய தூதரகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் அதிக சம்பளத்துக்கு தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி, இந்தியா உட்பட பல்வேறு பகுதிகளிலிருந்தும், பயண முகவர்களால் ஏமாற்றப்பட்டு அநேகமானவர்கள் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஆனால், அங்கு தொழில் பெற்றுத்தராது, உக்ரைனுடன் போரில் சண்டையிட, ரஷ்ய இராணுவத்தில் அவர்கள் வலுக்கட்டாயமாக சேர்க்கப்படனர் என பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்ட இரு இந்தியர்கள் உக்ரைன் போரில் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# இந்தியத் தூதர் - சுமந்திரன் கொழும்பில் நேற்று சந்திப்பு

## பல விடயங்கள் தொடர்பில் கலந்தாய்வு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் கொழும்பில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி உட்பட்ட இரு தரப்பு இணைப்பு சம்பந்தமான பல தரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.




# ஊடகவியலாளர்களைத் தடுத்த சஜித்தின் பாதுகாப்புப் பிரிவினர்

யாழ். சுழிபுரத்தில் ஊடகவியலாளர்களைக் காணொலி பதிவு செய்ய வேண்டாம் என்று சஜித்தின் பாதுகாப்புப் பிரிவு மிரட்டியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்குப் பஸ் ஒன்றை வழங்கினார்.

அந்த பஸ்ஸ/க்கு வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து சஜித் பிரேமதாஸ பஸ்ஸில் அமர்ந்து அதனைச் செலுத்துவதற்குத் தயாராகும்போது ஊடகவியலாளர்கள் அதனைக் காணொலி மற்றும் புகைப்படம் எடுத்தனர்.

உடனே அங்கிருந்த சஜித்தின் பாதுகாப்புப் பிரிவினர் ஊடகவியலாளர்களின் கமராவைக் கையால் தட்டி புகைப்படம் மற்றும் காணொலி எடுக்க வேண்டாம் என அச்சுறுத்தினர். இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது.

# அரசியல் கைதி ஒருவரை விடுவித்தது நீதிமன்றம்!



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு உதவினார் என்று தெரிவித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கியிருந்த முன்னாள் ஆயப்ப குதி அதிகாரி கந்தையா யோகநாதன் விடுதலை செய்யப்பட்டுள் ளார்.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினரான கதிர்காமநாதன் மகிந்தன் அல்லது வெண்ணயனன் என்பவருக்கு உதவியதாகத் தெரிவித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராகச் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

எனினும், இந்த வழக்கில் இருந்து முன்னாள் ஆயப்பகுதி அதிகாரி கந்தையா யோகநாதனை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

# கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சாவு!

(முதல் பக்கச் செய்தியின் மேலதிக படங்கள்...)







# தாமரை பறிக்கச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

(பழுவூரான்)

தாமரைப்பூ பறிக்கச் சென்ற பாடசாலை மாணவனொருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஆயித்தியமலை மகாவித்தியாலயத்தில் தரம் – 4 இல் கல்வி பயிலும் கொவிப்பொல வீதியைச் சேர்ந்த மதீஷ தேனுவன் (வயது – 9) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:–

இந்தச் சிறுவன் பாடசாலை முடிவடைந்து தனது நண்பர்கள் மூவருடன் தாமரை பறிப்பதற்காக குறித்த ஏரிக்குச் சென்றுள்ளான். அப்போது வறட்சிக் காலத்தில் தண்ணீர் எடுப்பதற்காக ஏரியின் நடுவே வெட்டப்பட்ட கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கியுள்ளார்.

சிறுவனுடன் வந்த நண்பர்கள் இச்சம்பவம் தொடர்பில் எவருக்கும் தெரிவிக்காத நிலையில் மாலை 5.45 மணி வரை சிறுவன் வீட்டிற்கு வராததால் சிறுவனின் தந்தை சிறுவனைத் தேடியுள்ளார்.

அதன்போது குழந்தை ஏரியை நோக்கிச் சென்றதைக் கண்டதாக அக்கம் பக்கமுள்ளவர்கள் தெரிவித்ததையடுத்து அங்கு சென்று பார்த்தபோது சிறுவன் ஏரியின் நடுவிலுள்ள கிணற்றில் காணப்பட்டுள்ளான். இந்நிலையில் அவர்கள் சிறுவனைக் கிணற்றிலிருந்து மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுவனை உடனடியாக ஆயித்தியமலை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போதிலும், அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிதி மோசடி வழக்கில் இருந்து ரஞ்சன் ராமநாயக்க விடுவிப்பு

நிதி மோசடி தொடர்பில் கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டுள்ளார்.சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் கண்டியை சேர்ந்த பெண் ஒருவரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டி ருந்தது.

குற்றவியல் வழக்கின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் தவறு இருப்பதாக நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

முறைப்பாட்டாளரான பெண் வழங்கிய வாக்குமூலம் ஊடாக இதுவொரு குற்றவியல் வழக்கு இல்லையெனவும் குடியியல் வழக்கு என தெரியவருவதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

இதற்கமைய, ரஞ்சன் ராமநாயக்கவை இந்த வழக்கிலிருந்து விடுவித்து கண்டி நீதிவான் சாமர விக்ரமநாயக்க நேற்று உத்தரவிட்டார்.



# சுயாதீன வேட்பாளராக ரணில் போட்டியிடுவார்

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

யார் எதனைக் கூறினாலும் உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடாமல், சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவாரென கொலன்னாவையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது அவர் அறிவித்தார்.

அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிப்பதாகவும், மேலும் பல கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக பேச்சுவார்த்தை நடத்தி, அதில் வெற்றியடைவதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.





# மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு; மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வாதப் பிரதிவாதம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை செயற்றிட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக நேற்றைய தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பல்வேறு தரப்பினரால் எதிர்ப்பு முன் வைக்கப்பட்டது.

எனினும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் எவ்வித அனுமதியும் வழங்கப்படாமல் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாட்டிற்கு எதிராக மக்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் அபிவிருத்தி குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக மன்னார் தீவு பகுதியில் 2 ஆவது கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து கலந்துரையாடப்பட்ட போது பல்வேறு தரப்பினரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு, மீனவ அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவை எதிர்ப்பை தெரிவித்தனர.

மன்னார் தீவுப் பகுதிக்குள் கனிய மணல் அகழ்வு அல்லது ஆராய்ச்சி நடவடிக்கைகள் இனி இடம் பெற கூடா எனப் பல முறை தெரிவிக்கப்பட்ட போதும், அகழ்வு தொடர்பாக அபிவிருத்திக்குழுகூட்டத்தில்கதைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த அபிவிருத்திக் குழு கூட்டத்தின் போது காற்றாலை மின் செயற் திட்டம் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த போதும் இது வரை எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வில்லை என விசனம் தெரிவித்தனர்.

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட கூடாது என்பதே அனைவரினதும் கோரிக்கை. எனினும் கனிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தை அழைத்து கலந்துரையாடியமையை ஏற்றுக் கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த விடயத்தை திரும்பத் திரும்பக் கதைப்பதில் அர்த்தம் இல்லை. அதற்கான அனுமதியை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு வழங்காத நிலையில்,கொழும்பில் அனுமதி வழங்குவதாக இருந்தால் இந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதற்கு என்றும் அவ்வாறு கொழும்பில் அனைத்திற்கும் அனுமதி வழங்கினால் இனிமேல் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை என்றும் இனிமேல் நடத்த வேண்டாம் என்றும் அவர் பகிரங்கமாக கோரிக்கை விடுத்தார்.

மேலும் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், முப்படையினர்,பிரதேச செயலாளர்கள், வட மாகாண திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# ரணில் வருகை

# 16 ஆம் திகதி மன்னாருக்கும் 24 இல் யாழ்ப்பாணத்துக்கும்

(ந.லோகதயாளன்)

இம் மாதம் 16 ஆம் திகதி மன்னாரிற்கும், 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தரவுள்ளார்.

மன்னாரில் இடம்பெறும் விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், காணி உறுதி வழங்கல் மற்றும் இளைஞர் சந்திப்புக்கள் ஆகியவற்றில பங்குகொள்ளும் வகையில் எதிர் வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க வருகை தரவுள்ளார்.

இதேநேரம் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு 24 ஆம் திகதி அவர் வருகை தரவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்த போதும் 24 ஆம் திகதிய நிகழ்ச்சி நிரல் இதுவரை வெளி வரவில்லை.



# மாவா போதைப் பாக்கு விற்பனை வவுனியாவில் தாராளம் எனப் புகார்

## பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் விசனம்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மாவா எனப்படும் போதை கலந்த பாக்கு விற்பனை அதிகரித்து வருவதாக பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கி இருந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வவுனியா பூந்தோட்டம் வீதியில் தென்னந்தோட்டத்தடி மற்றும் பூந்தோட்டம் சாந்தி, கற்குழி, தேக்கவத்தை உட்பட வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான மாவா எனப்படும் போதை கலந்த பாக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கியிருந்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளமையால் அந்தப் பகுதிகளில் இளைஞர் குழுக்கள் அதிகளவில் கூடி நின்று அந்தப் போதை பாக்கைக் கொள்வனவு செய்து உண்பதை அவதானிக்க கூடியதாக இருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

107 என்கின்ற போதை ஒழிப்பு தொடர்பான யுக்திய நடவடிக்கைக்கான இலக்கங்கள் அறிவிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் இவ்வாறான விடயங்களை கண்டும் காணாது இருப்பதாகவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.



# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு மற்றொரு குழு

ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.என்.ஜே.டி. அல்விஸ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் முதலில் கிடைத்த புலனாய்வுத் தகவல், அது தொடர்பில் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் குழுவினூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனிடையே, இந்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மட்டக்களப்பு – வவுணதீவில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் புலிகள் அமைப்பு தொடர்புபட்டுள்ளமை தொடர்பில் இராணுவ புலனாய்வு பணிப்பாளர் சபையின் வெளிக்கொணர்வு குறித்தும் இந்த குழுவினால் விசாரணை செய்யப்படவுள்ளன.

இவை தொடர்பான விசாரணை அறிக்கையை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி தம்மிடம் கையளிக்குமாறு ஜனாதிபதியினால் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்பை எதிர்த்த பத்துப் பேர் கைதாகிப் பிணையில்!

( ஹஸ்பர் ஏ.ஹலீம், எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதை ஆட்சேபித்து அதைத் தடுக்க முயன்ற அவ்வூர் மக்கள் பத்துப் பேர் கடந்த செவ்வாயன்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று அவர்கள் மூதூர் நீதிமன்றில் முன்னிலையாகிய போது அவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

கடந்த சனிக்கிழமை பாறை உடைப்பு இயந்திரத்துடன் உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன.

ஆனால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.45 மணிக்கு மீண்டும் மலை உடைப்பு வேலைகளை ஆரம்பித்த போது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பாறை உடைப்பு இயந்திரம் வேலைகளை ஆரம்பித்த போது அப்பகுதிக்கு அப்பகுதி மக்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று எதிர்ப்பை வெளியிட்டனர்



இதன் போது குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை கீழ் சமாதானக் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய செயல் ஒன்றைச் செய்தனர் என்ற அடிப்படையில் அவர்களில் 10 பேரை சம்பூர் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் அன்றே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட 10 பேரும் மூதூர் நீதிமன்றில் நேற்றுப் புதன்கிழமை மதியம் முன்னிலையாகினர். நீதிமன்றம் அவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் விடுவித்தது. குறித்த பிரதேசத்தை இம்மாதம் 15 ஆம் திகதியன்று நீதிவான் நேரில் பார்வையிடுவார் என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது.10 பேருக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு. முகுந்தன், ந. மோகன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

# பருத்தித்துறை மருத்துவமனை விடுதியில் இளம் மருத்துவர் சடலமாக மீட்கப்பட்டார்

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் விடுதியில் தங்கியிருந்த பெண்ணியல் நோய் வைத்தியர் ஒருவர் நேற்று பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடும் மன அழுத்தம் காரணமாக அதிகளவான மயக்க மருந்தை உடலில் செலுத்தியமையே அவரது மரணத்திற்குக் காரணம் எனப் பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பெண்ணியல் நோய் மருத்துவராக அவர் கடமை புரிந்து வரும் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரேமானந்தராசா கிருஷ்ணானந்தா (வயது-30) என்ற வைத்தியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவருடனான தொடர்பு இல்லை என உறவினர் ஒருவர் தெரிவித்ததை அடுத்தே, அவர் தங்கியிருந்த விடுதியை திறந்த போது அங்குள்ள உள்ள கட்டிலில் உயிரிழந்த நிலையில் அவர் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபை வாசுதேவா பிரேத பரிசோதனை மேற்கொண்டார்.அதிகளவான Atracurium எனும் மயக்க மருந்தை உடலில் செலுத் தியதால் மரணம் சம்பவித்ததாகப் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# போக்குவரத்து கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு விசேட பயிற்சி

## வவுனியா உலுக்குளம் பொலிஸார் நேற்று வழங்கினர்

(கே.வசந்தன்)

வவுனியாவில் பாடசாலை நேரத்தில் போக்குவரத்துக் கண்காணிப்பு கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கு உலுக்குளம் பொலிஸாரால் விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்றுமுன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் அமைந்துள்ள அல் இக்பால் மகா வித்தியாலய மாணவர்களுக்கே இந்தப் பயிற்சித் திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பாடசாலை முன்பாக காலை மற்றும் பாடசாலை நிறைவடையும் நேரம் என்பவற்றின் போது பொலிஸாருடன் இணைந்து போக்குவரத்துக் கண்காணிப்பு மற்றும் வீதிப் பாதுகாப்பு கடமையில் மாணவர்களையும் ஈடுபடுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி பொலிஸாரால் வழங்கப்பட்டது. மாணவர்கள் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் போது அணிவதற்கான சீருடைகளும் இதன்போது பொலிஸாரால் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் முதல்வர் ஏ. கே.உபைத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உலுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், போக்குவரத்துப் பொலிஸெ, பாடசாலையின் ஆசிரியர்கள், கல்வியற்க் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
















# தோட்டத் தொழிலாளர் சம்பள அதிகரிப்பு தொடர்பில் வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் பாராட்டு

வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாடு ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கில்பர்ட் எப்.ஹூங்போ ஆகியோருக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறித்துப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தும் நடவடிக்கையின் போது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமூக அபிவிருத்தி கொள்கையைப் பின்பற்றியமைக்காக அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பாராட்டியுள்ளார்.

தொழிலாளர் சந்தையை இலக்காகக் கொண்ட திட்டத்திற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு முழு ஆதரவை வழங்கும் எனப் பணிப்பாளர் நாயகம் கில்பர்ட் ஹூங்போ உறுதியளித்துள்ளார்.

# 4 வயதுச் சிறுமி தாக்கப்பட்ட காணொலியை சமூக ஊடகத்தில் பதிவிட்டவருக்கு சன்மானம்

4 வயதுச் சிறுமி தாக்கப்படும் காணொலியௌ சமூக ஊடகங்களில் பதிவிட்டவர் எனக் கூறப்படும் இளைஞருக்குப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னக்கோன் தலைமையில் 5 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்பட்டது.

இந்த சன்மானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றுள்ளது.

அண்மையில் வெலிஓயா பிரதேசத்தில் 4 வயதுச் சிறுமி தாக்கப்பட்ட காணொலியொன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிறுமியைத் தாக்கியதாகக் கூறப்படும் குகுல் சமிந்த என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.



தாக்குதலுக்குள்ளான சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் நன்னடத்தைப் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிபதி சதுன் விதான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இம்மாதம் 19 ஆம் திகதி வரை தடையை நீடிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



# புதிய வரிக்கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் மூன்று கட்டங்களின் கீழ் தீர்வை வரிக் கொள்கை ஒன்றை நடைமுறைப் படுத்துவதற்காக ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு அரசாங்கங்களினாலும் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத் தப்பட்டு வரும் பல்வேறு கொள்கைக ளுக்கு ஏற்ப தீர்வை வரிக் கொள்கை திருத்தியமைக்கப்படுவதால் நாட்டில் முதலீடுகளின் போட்டித்தன்மைக்கு பாதகமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய தீர்வை வரிக் கொள்கையொன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த குழுவினர் வர்த்தக மற்றும் தொழில்துறையினருடன் கலந்து ரையாடி இந்தத் தீர்வை வரிக் கொள் கையை தயாரித்துள்ளனர்.

# சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் நேற்று நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பரவலாக நடத்தினர்.

நாடளாவிய ரீதியில் அரசாங்க பாட சாலைகளில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கு சுபோதினி அறிக் கையின் படி மூன்றில் இரண்டு பங்கு சம்பள நிலுவையை வழங்க கோரி இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த இந்த கவன ஈர்ப்பு நடவ டிக்கையில் ஆங்காங்கே பெரும் எண் ணிக்கையானோர் பங்குபற்றினர்.

பாடசாலைகளின் கல்வி நடவடிக் கைகளை முடித்து கொண்டு மாலை 2.30 மணிக்கு மேல் வீதிக்கு இறங்கிய அதிபர் ஆசிரியர்கள் தமது கோரிக்கை களை எழுதிய பதாதைகளை கையில் ஏந்தி அரசாங்கத்திற்கும், கல்வி அமைச் சுக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தப் போராட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

## வவுனியாவில்.......!








**(கே.வசந்தன்)**

சம்பள முரண்பாட்டை நீக்குதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் னிறுத்தி வவுனியா மாவட்டத்தில் பணி யாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பஸ் நிலை யத்திற்கு முன்பாக இரண்டு மணி யளவில் ஆரம்பித்த குறித்த ஆர்ப் பாட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பெருந்திரளாக கலந்து கொண்ட னர்.

அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டதன் பின்னர் அங்கிருந்து வவுனியா தெற்கு வலய கேள்வி பணிமனை வரை ஊர்வலமாக சென்று அவ்விடத்தில் சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர்.

இதனை அடுத்து அங்கிருந்து மீண்டும் பழைய பஸ் நிலையத்தை வந்தடைந்து தமது போராட்டத்தை நிறைவு செய்திருந்தனர்.

# மட்டக்களப்பில்.......!





(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்வி வலயத்துக் குட்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

# யாழ்ப்பாணத்தில்.....!











அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க கோரி இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், யாழ் மாவட்ட அதிபர் – ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாக நேற்றய் மாலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்

# ஹட்டனில் .......!













**(பொகவந்தலாவ நிருபர் எஸ் சதீஸ், மஸ்கெலியா நிருபர்)**

அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஹட்டனில் மணி கூண்டு கோபுரத்திற்கு முன்பாக நேற்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் 26 ஆம் திகதி கொழும்பு கல்வி அமைச்சிற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கப் போகின் றார்கள் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்கள் தெரிவித்தனர்

## மன்னாரில்....!






(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

அதிபர்,ஆசிரியர் தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னாரில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நேற்று மதியம் 2 மணி அளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமான ஆர்பாட்டம் பேரணியாக வலயக்கல்வி பணிமனை வரை சென்றது.

வலயக்கல்வி பணிமனைக்கு முன்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர், ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் .

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் இலங்கை ஆசிரியர்சேவை சங்கத்தின்பிரதிநிதிகள்கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியாவில்....!






(தலவாக்கலை நிருபர்)

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடி தீர்வு வழங்கக் கோரி, கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களால் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நுவரெலியா ஆவாஎலிய மகளிர் உயர்நிலை பாடசாலை முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

திருத்தும் பணிகளில் ஈடுப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது உணவு இடைவேளையின் போது இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில்....!






(த.சுபேசன்)

அதிபர், ஆசிரியர்களுடைய சம்பள முரண்பாட்டை நீக்க வலியுறுத்தி நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை முன்பாக தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## கல்முனையில்....!










(பாறுக் ஷிஹான், எம்.எம். நம்ஸீன், எஸ்.அஷ்ரப்கான்)

சம்பள முரண்பாட்டை தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி கல்முனையில் ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தது.கல்முனை வாடி வீட்டு வீதியில் இருந்து பேரணியாக கல்முனை மாநகர பகுதிக்கு சென்று அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நாடளாவிய ரீதியாக சகல கல்வி வலயங்களுக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது. அதிபர், ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் அதிக எண்ணிக்கையில் ஈடுபட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் -13.06.2024

## மேஷம்

உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளர்ச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

## ரிஷபம்

இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சயமற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பணியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரின் கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உணவு முறையில் கவனம் தேவை.

## மிதுனம்

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயல்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. செலவுகளை கண்காணியுங்கள்.

## சிம்மம்

முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த்தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.

## கன்னி

இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும். இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை. உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரும்.

## துலாம்

இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தியம். இந்து மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகையில் விரைவாகப் பணம் கிடைக்கும்.

## விருச்சிகம்

உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13-06.2024


தனுசு

இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற செலவினங்கள் காணப்படுவதால் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். நிதி வளர்ச்சியில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.


கும்பம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

இன்று வளர்ச்சி காணப்படுகின்றது. பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். திட்டமிடுவதன் மூலம் திறமையாகப் பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் தேவைகளைச் சமாளிக்கச் சிறிய அளவிலான கடன்கள் வாங்குவீர்கள்.இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.


மகரம்

இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதியுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதிநிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.


மீனம்

உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பனியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்களின் கடின உழைப்பின் மூலம் .ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.அமைதியான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thamilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 771 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Karathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park